served its social utility and it has stood the test of time beyond reasonable doubt. Therefore we would like the Government very much to retain that system as it is. That is our request.

THE HON. THIRU S. MADHAVAN : I agree with the interpretation of the hon. Member about constitutional provision for getting consent of the President. Of course, he is supporting our resolution. I am glad. We have already told that we are setting up ஊர் நீதிமன்றம் which incorporates this suggestion. We will soon take it up for consideration.

(ஆ) கோவை மாவட்டத்தில் காட்டுக்கண்டங்கத்திரி என்ற களை வேகமாகப் பரவி வருவதால் பயிர் நிலங்கள் பாழ்படுவது குறித்து.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்:—

"கோவை மாவட்டத்தில் காட்டுக்கண்டங்கத்தரி என்ற களை வேகமாகப் பரவி வருவதால் பயிர் நிலங்கள் பாழ்பட்டு விடுவதால், இதை உடனடியாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பது பற்றி".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இதைப்பற்றி என்னுடைய அறிக்கை@ பேரவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அறிக்கையில் ஒன்றும் நமக்கு சாதகமாகப் பதில் இல்லை. இதே தீர்மானத்தை நான் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே கொண்டு வந்தேன். சென்ற ஆண்டு இந்த ரிசர்ச் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. இதன் முக்கியத்துவத்தை இங்கே யாரும் உணர்ந்ததாகவே தெரியவில்லை. கொஞ்ச நாளிலே தமிழகத்திலே சோற்றுக்கு

@ 399-402-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

லாட்டரி அடிக்க வேண்டிய நிலைமை வந்துவிடும்போல் இருக்கிறது. எனவே இது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை யாரும் புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறார்கள். இதை ஒழிக்க முடியாது என்று சொல்கிறார்கள். 'போளிரியல்' என்ற மருந்தை சான்டோஸ் கம்பெனி ஸ்விட்சர்லாந்திலேயிருந்து வரவழைத்து அதை உடுக்கம்பாளையம் என்ற இடத்திலே போட்டு அங்கே நூற்றுக்கு நூறு வெற்றி கண்டிருக்கிறார்கள். அதேபோல் டார்டன் 20. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விகள் மட்டும் போடுங்கள்.

திரு. கோவை செழியன் : இது ரொம்ப கஷ்டமான காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கஷ்டமான காரியம் என்றால் அதை வேறு டிஸ்கஷனிலே வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

திரு. கோவை செழியன் : டார்டன் 22-ஐப் பயன்படுத்து கிறார்கள். டார்டன் 20-ஐப் பயன்படுத்தினால் வெற்றி பெறும் என்று அந்தக் கம்பெனியார் அறிக்கை விட்டு இருக்கிறார்கள். எனவே, எது எதற்காகவோ ஃபாரின் எக்சேஞ்ச் இல்லை என்று போராடுவதைப் போல் இதற்கும் மத்திய சர்க்காரிடத்திலே இந்த அரசு சொல்லியதா? அந்த கெமிகலை இம்போர்ட் செய்வதற்கு என்ன முயற்சியை எடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த காட்டுக்கண்டங்கத்தரி களையைப்பற்றி எப்படி மருந்து மூலம் அகற்ற முடியும் என்பதற்கு ஆராய்ச்சியில் முடிவு தெரியவில்லை. இதிலே இருப்பதற்குள்ளே டார்டன் 22-20 அல்ல 22—என்பது கூடியவரையில் நல்ல மருந்தாகத் தெரிகிறது. போன வருஷம் கொஞ்சமாக அதைப் பரிசோதனை செய்து பார்த்து இந்த வருஷம் வயல்களிலே போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வெற்றியடைந்தால் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்ய முடியும். விலையும் அதிகம் இல்லை, ஒரு எக்கருக்கு சுமார் 18 ரூபாய் அளவிற்கு ஆகியிருக்கிறது. அந்த மருந்து வருகின்ற வரையில் காத்திராமல் விவசாயிகள் இந்தக் களையை வளரவிட்டுப் பிறகு பிடுங்குவதை முளையிலேயே கிள்ளி எறிந்தால் நல்லது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இரண்டு நாளில் ஒரு அடிக்குமேல் வந்துவிடுகிறது. எனவே அதற்குக் கூலி கொடுத்துக் கட்டாது. ஒன்றைச் செய்யுங்கள், சீரியல் பயிற்சி வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதை கம்ப் ளிட்டாக 'எராடிகேஷன்' செய்துவிட்டால் மற்ற இடங்களுக்குப் பரவாது. வெள்ளாமை வராவிட்டாலும் போகட்டும், இதை யாவது செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த மருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அடிக்க வேண்டிய மருந்து என்று சொன்னார்கள். எங்கிருந்து அதைக் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. ஏனென்றால், நான் எழுதிக் கொடுத்திருப்பதில் கடைசி பாராவில் இருக்கிறது, இந்த மருந்தை நான்கு மாத இடைவெளியில், நான்கு மாதங்களுக்கு ஒரு முறையே அடித்தால் போதும் என்று. அதைச் செய்தால் வேரோடு களையை அகற்ற முடியும் இந்த மருந்தால் என்று வேளாண்மைத் துறை நம்புகிறது. ஆனால் இன்னும் சோதனை முடியவில்லை என்ற கட்டத்தில், நான் சொல்வதெல்லாம், அது உயரமாக வளர்வதற்கு முன்னால், 10 அடி நீளத்திற்கு வேர் விடுவதற்கு முன்னால் களையைக் கிள்ளிவிடுவதால் இலகுவாக அகற்ற முடியும். அந்த முறையில் செய்தால் விவசாயிகள் இந்தக் களையைக் களைந்து இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்.

5. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவை விதி 21 (3)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"நிகழ்ச்சி நிரலில் உள்ள (பிற்பகல் 4 மணிக்கு நடைபெறு வதாகவுள்ள) இனம் 4-பேரவைத் துணைத் தலைவர் தேர்தலை, இனம் 1-க்கு அடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.